## மெட்ரோ ரெயில் நிலையங்களில்

# டாக்சி, ஷேர் ஆட்டோ சேவையை விரிவுபடுத்த திட்டம்

சென்னை, அக்.4–

மெட்ரோ ரெயில் நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:–

சென்னையில் 8 மெட்ரோ ரெயில் நிலையங்களில் சோதனை அடிப்படையில் ஷேர் ஆட்டோ சேவையும், 5 மெட்ரோ ரெயில் நிலையங்களில் டாக்சி சேவையும் அளிக்கப்பட்டு வருகிறது. 3 கிலோ மீட்டர் தூரத்துக்கு டாக்சியில் ரூ.15–ம், ஷேர் ஆட்டோவில் ரூ.10–ம் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறது.

ஆகஸ்டு மாதம் 18,797 பயணிகளும், செப்டம்பர் மாதம் 28,831 பயணிகளும் இந்த சேவையை பயன்படுத்தி உள்ளனர். டாக்சி, ஷேர் ஆட்டோ சேவையை பயணிகள் அதிகம் பயன்படுத்தி வருவதால் இதனை விரிவுபடுத்த திட்டமிட்டுள்ளோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.